4

# சீயோனில் வைக்கப்பட்ட கல்லின்மீது நம்பிக்கையாயிருங்கள் (1 பேதுரு 2:1–10)

*தானாகவே அழிந்து கொள்ளும் தன்மை மற்றும் தீவிரவாத தனிநபர்த்துவம் என்பது அடிக்கடி மக்களை ஒருவர் மற்றவரிடத்தில் இருந்து தனிமைப் படுத்துகிறது. மக்கள் பலர், சார்ந்திருப்பதின் மதிப்பைப் பற்றிச் சிறிதளவே மதிப்புக் கொண்டுள்ளனர். நாம் எவரொருவருக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டாதிருக்கும்படி அல்லது நமக்குத் தேவை, தனிமை அல்லது பயம் ஏற்படும் வரையிலும் நாம் விரும்புகிற வழியில் வாழும்படி நாம் விரும்புவோம்.*

*பேதுரு தமது முதல் நிருபத்தை யாருக்கு எழுதினாரோ, அந்தக் கிறிஸ்தவர்கள், தங்களுக்கு ஆதரவு அளித்திருந்த மற்றும் உலகத்தில் தங்களுக்கு ஒரு இடத்தைக் கொடுத்திருந்த வாழ்வின் வழி எல்லாவற்றிலும் இருந்து துண்டிக்கப் பட்டிருந்தனர். 2:1-10ற்கு மையமாக உள்ள, சார்ந்திருத்தல், ஐக்கியம், பரஸ்பர ஆதரவு மற்றும் ஒருவருக்கொருவர் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருத்தல் ஆகியவற்றின் செய்தி அவர்களுக்குத் தேவைப்பட்டது. அவர்கள் என்னவாக இருந்திருந்தனர் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர், ஆனால் இப்போது அவர்கள் என்னவாக இருந்தனர், இப்போது அவர்கள் கிறிஸ்துவை அணிந்து கொண்டிருந்தனர் மற்றும் தங்களின் கடந்த காலத்துடன் தங்களை இணைத்திருந்த கயிறுகளை வெட்டியிருந்தனரா? பேதுரு, "நீங்கள் வளருவதற்கு ஆவிக்குரிய பால் தேவைப்படுகிற புதிதாய்ப் பிறந்த குழந்தைகளாக இருக்கிறீர்கள். நீங்கள் பிரதான மூலைக்கல்லாகிய இயேசு கிறிஸ்துவின்மீது கட்டப்படும் பரிசுத்த ஆலயமாக இருக்கிறீர்கள். நீங்கள் தேவனால் விசேஷித்த வகையில் தயவு பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களினமாக இருக்கிறீர்கள்" என்று கூறினார். சார்ந்திருத்தல் மற்றும் ஒன்றிணைந்திருத்தல் ஆகியவை இவ்வசனங்களின் மையக் கருத்துக்களாக உள்ளன.*

## புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்குக் களங்கமில்லாத பால் (2:1-3)

பேதுருவின் வாசகர்களில் சிலர், பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகக் கிறிஸ்தவர்களாக இருந்திருந்தனர். பெரும்பான்மையானவர்கள், விசுவாசத்தில் அதைவிட கணிசமான அளவுக்கு இளையவர்களாகக் கருதப்பட்டனர். பழைய வாழ்வைப் புதிய வாழ்வில் இருந்து பிரித்த எல் லையைக் குறிப்பிடுதலின் தெளிவான கோட்டை மறுவலியூட்டுதல் அவசியமாக இருந்தது. அவர்களின் வாழ்வு கிறிஸ்துவின் நற்தன்மைகளால் நிரப்பப்படுவதற்கு முன்பு, முதலில் அவர்கள் தங்கள் உலகப் பொதியை அகற்ற வேண்டியிருந்தது.

**பழைய மனுஷனைக் களைந்துபோடுதல்**

*அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளைப் புறம்பே போட வேண்டும் என்று, அவர்களிடம் பேதுரு வேண்டுகோள் விடுத்தார். அவர், "இப்படியிருக்க, … சகல துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு" என்று கூறினார் (2:1, 2). "ஒழித்துவிட்டு" ("புறம்பே போட்டுவிட்டு"; "உங்களை விலக்கிக்கொண்டு") என்ற சொற்றொடர், கிறிஸ்தவர்களை, வாழ்வின் பழைய வழிகளை "களைந்துபோட்டு" விடும்படி எபேசியர் 4:22லும், "புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளும்படி" எபேசியர் 4:24லும் வேண்டிக்கொண்ட பவுலினால் இதைபோன்ற வகையில் பயன்படுத்தப்பட்டது. கொலோசெயர் 3:8-11 இதே போன்றதாக உள்ளது. இதே வார்த்தையைப் பயன்படுத்திப் பவுல், அந்தகாரத்தின் கிரியைகளைத் "தள்ளிவிடும்படி" வேண்டுகோள் விடுத்தார் (ரோமர் 13:12). ஒருவர், தமது வாழ்வில் கிறிஸ்துவை* உள்ளே *அணிந்துகொள்வதற்கு முன்பு, மற்ற விஷயங்கள்* வெளியே *தள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாக உள்ளது.*

*துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் - ஆகிய இந்தக் குற்றங்கள், வாழ்வின் பழைய வழியைக் குறிப்பிடுவதாகப் பேதுரு கூறினார். அவைகள் ஒழிக்கப்பட வேண்டும்.*

*பெரும்பாலும், பேதுருவின் வார்த்தைகள், கிறிஸ்தவர் ஒழித்துப்போட வேண்டிய பொதுவான நடைமுறைகளைக் குறிப்பிடுவதற்கு மாறாக, அவர்கள் ஒழித்துப்போட வேண்டிய பொதுவான பண்புகளையே குறித்தன. "துர்க்குணம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, மோசமான சிந்தைக்குரிய பொதுவான வார்த்தையாக உள்ளது. அடுத்த வார்த்தை* NASB *மற்றும்* KJV *ஆகியவற்றில்* "guile" [*"கபடம்"*] *என்று தரவழைக்கப்பட்டுள்ளது, ஆனால் இது* NIV*யில்,* "deceit" [*"கபடம்"*] *என்று தரவழைக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டைத் தவிர, மற்ற கிரேக்க எழுத்துக்களில், இவ்வார்த்தை சிலவேளைகளில், மீன்பிடிக்கும் மனிதர் ஒருவர் பயன்படுத்தும் இழுக்கும் பொருள் அல்லது தூண்டில் இரை என்பதைச் சிலவேளைகளில் குறிப்பிடுகிறது.* "Guile" *என்பது ஒருவரை, பொதுவாக தீமைக்குள் அவரை வழிநடத்துதல் என்று அர்த்தப்படுகிறது. மூன்றாவது வார்த்தையான "வஞ்சகம்" என்பதற்குச் சிறிது விளக்கம் தேவைப்படுகிறது. இது தவறான அல்லது மறைவான வழியில் ஒருவர் தம்மை இடுதலின் பண்பாக, ஒருவர் தம்மிடத்தில் இல்லாத ஒரு குணத்தை இருப்பதாக காட்டும் பண்பாக உள்ளது.*

*பேதுரு பயன்படுத்திய, "பொறாமை"* ["envy"] *என்ற நான்காவது வார்த்தை, மறைவான பொல்லாங்காக உள்ளது. இதுவும், பொறாமையின்* ["jealousy"] *என்ற வார்த்தையும் ஒன்றுடன் இன்னொன்று கவிந்திருந்தாலும், இது பொறாமையைப் போன்றதாக இருப்பதில்லை. குரோதம் என்பது, திருப்தியற்ற நிலையின் முறுமுறுக்கும் உணர்வாகவும், விரும்பத்தக்க சில விஷயங்கள் ஒருவருக்கு நடந்து, அவர் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதால் அவரிடத்தில் காண்பிக்கப்படும் மோசமான சிந்தையும் ஆகும். பொறாமை என்பது நாம் யாவரும் நமக்குள் அடையாளம் காணக்கூடிய மோசமான ஒரு குற்றமாக உள்ளது.*

*"புறங்கூறுதல்" ("பொல்லாங்காய்ப் பேசுதல்;"* KJV*) என்ற கடைசி வார்த்தை இந்த வசனத்திலும் 2 கொரிந்தியர் 12:20லும் மாத்திரமே காணப்படுகிறது. இது, ஒருவரின் பண்பை அல்லது நற்பெயரைக் கெடுத்தல் என்பதை*

அர்த்தப்படுத்துகிறது. கூறப்பட்டது உண்மையா அல்லது தவறா என்பது சிறிது வேறுபாட்டையே ஏற்படுத்துகிறது. ஒருவர், இன்னொருவரின் நற்பெயரைத் துன்மார்க்கமாக அழித்தால், அவர் புறங்கூறுதலின் குற்றமுள்ளவராக இருக்கிறார்.

இந்த வார்த்தைகள் பொதுவில் கொண்டிருக்கக் கூடிய விஷயம் என்ன? இவை யாவையும், இசைவிணக்கம் மற்றும் நற்சிந்தை ஆகியவற்றை அழிக்கக்கூடிய குற்றங்களைக் குறிக்கின்றன. இவைகள் "மாயமற்ற சகோதர சிநேகம்" என்பதற்கு முற்றிலும் நேர்மாறானவையாக உள்ளன (1:22). கர்த்தருடைய சபையானது இயல்பிலேயே, அன்பினால் ஒன்றாக நெருக்கிப்பிணைக்கப்பட்டுள்ள மக்கள் கூட்டமாக உள்ளது (யோவான் 13:35). இந்தத் துன்மார்க்கங்கள் சரீரத்தைக் கிழித்துப்பிரிக்கின்றன. இவைகள் உலகத்தில் பொதுவான காட்சியாக உள்ளன, ஆனால் கிறிஸ்தவர்கள் இவற்றை ஒழித்துப்போட வேண்டும். இந்த நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்கள் ஒன்றிணைப்பு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் கருத்துணர்வுக்கு வரவேண்டுமென்றால், அவர்கள் இப்படிப்பட்ட குற்றங்களை நடைமுறைப்படுத்தக் கூடாதிருந்தது. அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளை விட்டு ஒதுங்கிய நிலையில், ஒன்றிணைந்த மற்றும் அக்கறையுள்ள மக்கள் அளிக்கக்கூடிய ஆதரவும் பலமும் தேவைப்பட்ட நிலையில் இருந்தனர்.

### திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருத்தல்

1ம் அதிகாரத்தில் பேதுரு இருமுறை (வசனங்கள் 3, 23) பேதுரு, தமது வாசகர்கள் மறுபடியும் ஜெநிப்பிக்கப் பட்டிருத்தல் பற்றிக் குறிப்பிட்டார். ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், அவர்கள் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல இருந்தனர். அவர்கள் தங்கள் வாழ்வின் பழைய வழிகளை ஒழித்துப்போட வேண்டியதாக இருந்தது, புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் என்ற வகையில், அவர்கள் "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல்" (2:3) வாஞ்சையாயிருக்க வேண்டியதாயிற்று. மொழிபெயர்ப்புகளில் உள்ள வேறுபாடு ("sincere milk of the word," KJV; "pure spiritual milk," NIV), மொழிபெயர்ப்பதற்குக் கடினமாக உள்ள கிரேக்க வார்த்தையைப் பிரதிபலிக்கிறது. KJV மொழிபெயர்ப்பு, *logikon* என்பதை "of the word" என்று மொழிபெயர்க்கையில் NIV வேதாகமம் அதை "spiritual" என்று தரவழைக்கிறது. அதிர்ஷ்டவசமாக, ஒரு முக்கியமான முடிவைத் தரவழைப்பதற்கு இவ்விடத்தில் மொழிபெயர்ப்புக் கேள்விகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் இருப்பதில்லை. ஆவிக்குரிய தன்மையானது தேவன் தமது வசனத்தில் தம்மை வெளிப்படுத்தி இருக்கும் விஷயத்துடன் உறவுபடுதல் அத்தியாவசியமானதாக உள்ளது. வசனமே ஆவிக்குரிய பெலம் பாய்ந்தோடுவதற்கான ஆதார மூலமாக உள்ளது.

தேவனுடைய மனிதர்கள், தேவன், அவருடைய வழிகள் மற்றும் தேவனுடைய வசனத்தின் மீது கொள்ள வேண்டிய விருப்பத்திற்கு அடையாளத்துவமாக உணவு மற்றும் பானம் ஆகியவற்றிற்கான விருப்பத்தை, எவ்வளவு அடிக்கடி பயன்படுத்துகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கதாக உள்ளது. பாக்கியங்களில் ஒன்று, "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்று கூறுகிறது (மத்தேயு 5:6). சங்கீதக்காரர், "தேவனே,

*நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயி ருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது" என்று எழுதினார் (சங்கீதம் 63:1). பேதுரு, புதிதாய்ப்பிறந்த ஒரு குழந்தை, தனது வளர்ச்சிக்குப் பாலின்மீது ஏக்கமாயிருக்கும் சித்திரத்தை வரைந்தார். "திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்." "அப்போது நீங்கள் கர்த்தருடைய குடும்பத்தில் உங்களைப் பலமுள்ளவர்களாகவும் பாதுகாப்புள்ளவர்களாகவும் கண்டறிவீர்கள். நீங்கள், கிறிஸ்து தமது மக்களுக்கு ஆயத்தம் செய்து வைத்துள்ள செல்வத்தன்மை பற்றி அறிவதற்கு வளருவீர்கள்" என்று பேதுரு ஆலோசனை கொடுத்தார்.*

## மனிதரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல் *(2:4-8)*

*கிறிஸ்தவர்கள், "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்" ஒன்றுடன் தங்களுக்குள்ள பொதுவான உறவின் மூலம், சார்ந்திருத்தலை அனுபவிக்கின்றனர். சபையின் இயல்பைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள உதவுவதற்குப் புதிய ஏற்பாடு, மனதில் பதியும் பல சித்தரிப்புகளைப் பயன்படுத்துகிறது. அது [சபை] ஒரு சரீரமாக உள்ளது, அதன் பல்வேறு பாகங்கள், முழுமையின் நல் இருப்பிற்காக ஒன்றாகச் செயல்படுகின்றன (1 கொரிந்தியர் 12); அது தனது குடிமக்கள் ஒவ்வொருவரும் எல்லாருடைய நலத்திற்காகவும் பணிசெய்யும் ஒரு இராஜ்யமாக உள்ளது; மற்றும் அது பல்வேறு பாகங்கள் முழுமையைத் தாங்கி நிற்கும் ஒரு கட்டிடமாக உள்ளது. பேச்சின் எல்லா உருவங்களும் பின்வரும் விஷயங்களைப் பொதுவில் கொண்டுள்ளன: இவைகள், தேவனுடைய மக்கள் ஒருவருக்கொருவர் சார்ந்திருத்தலை வலியுறுத்துகின்றன ("அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால்," எபேசியர் 4:25), மற்றும் இவைகள், கிறிஸ்தவர்கள் யாவரும் கிறிஸ்துவுடன் பகிர்ந்துகொள்ளும் உறவின் காரணமாக, ஒருவர் மற்றவருடன் இவ்வாறான உறவு கொண்டுள்ளனர் என்பதைத் தெளிவாக்குகின்றனர்.*

***ஜீவனுள்ள கற்கள்***

*சபையானது தேவனால் கட்டப்பட்ட மாபெரும் கட்டிடமாக உள்ளது என்ற கருத்தைப் பேதுரு பிறப்பித்தார் (2:4). கிறிஸ்து மூலைக்கல்லாக இருக்கிறார். கட்டிடத்தின் வடிவமைப்பும் வனப்புகளும் மாத்திரமல்ல, ஆனால் அதன் ஆதாரமும் இந்த மாபெரும் மூலைக்கல்லின்மீது அமர்ந்துள்ளது. பவுலும்கூட, கிறிஸ்துவைப் பற்றிப் பிரதான மூலைக்கல் என்று எழுதி, "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" என்றும் கூடுதலாகக் கூறினார் (எபேசியர் 2:21).*

*சபையானது, கிறிஸ்துவுக்குள் ஒன்றுகூட்டி இணைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வீடாக உள்ளது, ஆனால் அது ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தும் ஆசாரியக்கூட்டமாகவும் உள்ளது. "பலி" என்ற வார்த்தை ஒருவர் தம்மையே மறுத்தல் என்ற விஷயத்தை அர்த்தப்படுத்த வந்துள்ளது. யாரேனும் ஒருவர், "நான் எனது வீட்டிற்கு வண்ணம் தீட்டுவதற்காக எனது இரண்டு வார*

விடுமுறையைத் தியாகம் செய்தேன்" என்று கூறலாம். 2:5ல், பலி என்பது தியாகம் என்ற கருத்து எதையும் கொண்டிருப்பதில்லை. இது சுயாதீன மாகச் செலுத்தப்படும் அளிப்பு ஒன்றை - பிதாவின் புகழ்ச்சிக்கும் மகிமைக்கும் செலுத்தப்படும் சந்தோஷத்தின் பலியை - குறிக்கிறது. மோசேயின் நியாயப்பிர மாணத்தின்கீழ், பலிகளைச் செலுத்த ஆசாரியர்கள் மாத்திரமே உரிமை கொண்டிருந்தனர். ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியராக இருக்கிறார். கட்டிடம் என்பதே ஒரு பரிசுத்த ஆசாரியத்துவமாக உள்ளது. இந்த ஆசாரியர்கள் அளிக்கும் பலியானது அவர்கள் வாழ்வின் முழுமையான அளிப்பாக உள்ளது - அது கிறிஸ்துவின் சாயலில் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட வாழ்வாக உள்ளது.

**சீயோனில் ஒரு கல்**

பேதுரு தமது வாசகர்கள், கடந்த காலங்களில் இருந்த தேவனுடைய மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் தொடர்ச்சியைப் பற்றி அவர்களுக்கு நினைவூட்டினார். சீயோனில் தேவன் ஒரு கல்லை, பரீட்சிக்கப்பட்டதும் விலையேறப் பெற்றதுமான ஒரு கல்லை வைப்பது பற்றியும் (ஏசாயா 28:16), தேவன் தமது மக்களாயிருந்து கீழ்ப்படியாமற்போனவர்கள் இடறுதலுக்கு ஏதுவான கன்மலையாவது பற்றியும் (ஏசாயா 8:14) ஏசாயா தீர்க்கதரிசி உரைத்திருந்தார். யூதர்களால் கிறிஸ்து புறக்கணிக்கப்படுதல் பற்றிப் பவுல் கலந்துரையாடினார் மற்றும் அவர், பேதுரு 2:6-8ல் செய்தது போன்றே, ரோமர் 9:33ல் மேற்கூறப்பட்ட இரு வசனங்களையும் ஒன்றாக இணைத்தார். கிறிஸ்து, சீயோனில் தேவன் வைத்த மூலைக்கல் என்பதையும் கீழ்ப்படியாதவர்களுக்கு அவர் இடறுதலின் கல் என்பதையும் அப்போஸ்தலர்கள் புரிந்திருந்தனர்.

பின்வருவது முக்கியமான சத்தியமாக இருந்தது: புறக்கணிக்கப்பட்ட கல்லாகிய கிறிஸ்துவைத் தேவன் தமது கட்டிடத்திற்கு அஸ்திபாரக் கல்லாக ஏற்படுத்தியிருந்தார். சங்கீதம் 118:22 இந்தச் சிந்தனையை உண்டாக்கியது. கிறிஸ்து மத்தேயு 21:42ல் இவ்வசனத்தைக் குறிப்பிட்டார் (இ.வ. லூக்கா 20:17), மற்றும் பேதுரு தாமே எருசலேமின் ஆலோசனைச் சங்கத்தின் முன்பாக நிற்கையில் இதைக் குறிப்பிட்டிருந்தார் (நடபடிகள் 4:11).

இவையாவும், கிறிஸ்தவர் யாராக இருக்கிறார் என்பதை அவருக்கு [கிறிஸ்தவருக்கு] கூறுகின்றன. அவர் எல்லா யுகங்களிலும் தேவனுடைய உண்மையான மக்களுடன் ஒன்றாக இருக்கிறார். அவர் ஆபிரகாமின் பிள்ளையாக இருக்கிறார், ஏசாயாவின் நண்பராக இருக்கிறார், சங்கீதக்காரரின் மாணவராக இருக்கிறார். அவரது பாரம்பரியமானது ஐசுவரியமும் கண்ணியமும் கொண்டுள்ளது. "யூதனாயிருத்தல்" (அதாவது, தேவனால் தேர்ந்துகொள்ளப் பட்டவராயிருத்தல்) என்பது மாம்சப் பிரகாரமான பிறப்பில் அடங்கியிருப்ப தில்லை, ஆனால் அது ஆவிக்குரிய பாரம்பரியத்தில் ஒன்றிணைக்கப்பட்டிருத்தலில் அடங்கியுள்ளது. ரோமர் 2:28, 29ல் பவுல் பின்வருமாறு கூறியது மிகவும் நன்றாகவே உள்ளது: "ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது." தங்கள் பழைய வாழ்வின் வழி மற்றும் தங்களை விளக்கப்படுத்தியிருந்த பாரம்பரியங்கள்

*ஆகியவற்றில் இருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு, "இப்போது நீங்கள் ஒரு புதிய மக்களைச் சார்ந்திருக்கிறீர்கள். நீங்கள் புதிய பாரம்பரியங்கள் மற்றும் ஒரு புதிய ஆவிக்குரிய வம்ச வரலாறு ஆகியவற்றை அறிந்து மதிக்க வருவீர்கள்" என்று கூறினார்.*

*கிறிஸ்தவர்களுக்கு, இயேசு விலையேறப்பெற்ற மூலைக்கல்லாக, சத்தியத்தின் அஸ்திபாரமாக, இரட்சிப்பு மற்றும் வாழ்வு ஆகியவற்றின் ஆதாரமூலமாக இருந்தார். இருப்பினும் இதே கல்லானது, கீழ்ப்படியாதவர்களுக்கு இடறுதலின் கல்லாக இருந்தது. சிலர் கீழ்ப்படியாதவர்களாக இருந்தனர் என்பதில் நாம் திகைப்படைவதில்லை, ஆனால் 2:8ன் கடைசிப் பகுதி, சில கேள்விகளை எழுப்புகிறது. "அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்" என்று கூறியபோது பேதுரு எதை அர்த்தப்படுத்தினார்?* KJV *வேதாகமத்தின் வார்த்தையமைப்பு இதேபோன்றுள்ளது மற்றும்* NIV*யின் தரவழைப்பு சிறிது உதவி அளிக்கிறது. இந்த வார்த்தைகள், கீழ்ப்படியாதவர்கள் தங்கள் செயல்களில் தெரிவு எதையும் கொண்டிருக்கவில்லை, அதாவது அவர்கள் உள்ளாக என்னவாக இருந்தார்களோ, அந்தக் காரணத்தினாலும் அவர்கள் நித்தியத்திற்கும் எவ்வாறு இருக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டு இருந்தார்களோ அந்தக் காரணத்தினாலும், அவர்கள் கிறிஸ்துவின் செய்தியைப் புறக்கணித்தனர் என்று அர்த்தப்படுத்துவதாக, நாம் எடுத்துக்கொள்ளலாம். இதற்கு மறுபுறத்தில் பேதுரு, உலகத்தின் தேவபக்தியற்ற தன்மை தரப்பட்டநிலையில் கலகம் என்பது மனிதகுலத்தைப் பண்புபடுத்துவதாக இருக்கையில், சிலர் கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் நிலையில் கட்டப்பட்டிருந்தனர் என்று கூறியிருக்கலாம். மனிதர்கள் தங்கள் சொந்தக் கீழ்ப்படிதலுக்கு பொறுப்பு ஏதேனும் கொண்டிருந்தால் (அப்படி இல்லையென்றால் பேதுரு இந்த நிருபத்தை ஏன் எழுதியிருக்க வேண்டும்?), நாம் பிந்திய விளக்கத்தையே தேர்ந்துகொண்டாக வேண்டும்.*

## *ராஜரீகமான ஆசாரியக்கூட்டம், பரிசுத்த ஜாதி (2:9, 10)*

*"நீங்களோ, ... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும். அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்று பேதுரு கூறினார் (2:9). ஒவ்வொரு சொற்றொடரும்,தேவன் தமது மக்களை வழிநடத்துதல், போஷித்தல் மற்றும் உருவாக்குதல் ஆகியவற்றை எதிரொலிக்கிறது. கிறிஸ்தவர்கள், பாரம்பரியம் மற்றும் வாக்குத்தத்தம் ஆகியவற்றின் நூற்றாண்டுகளினுடைய வாரிசுகளாக இருக்கின்றனர்.*

### *தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி*

*தேவன் தமது நாமத்தைத் தரித்துக் கொள்ளும்படிக்கு உலகத்தின் எல்லாப் பழங்கால மக்களிலும் இருந்து இஸ்ரவேல் மக்களைத் தேர்ந்துகொண்டார். மோசே, "வேறு எந்த மக்கள் உங்களைப் போன்று உள்ளனர்?" என்று கேட்டிருந்தார் (உபாகமம் 4:32-34). இஸ்ரவேல் மக்கள் தங்களுக்குக் கிடைத்திருந்த ஆசீர்வாதங்களை மிகவும் அரிதாகவே புரிந்துகொள்ள முடிந்தது.*

இந்த அண்டத்தின் ஒரே தேவன், தனிச்சிறப்பற்ற அடிமை மக்களைத் தமது சொந்தஜனமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது எவ்வாறு முடிந்தது? அவர்களுக்கு இந்தப் பதில் மாத்திரம் தரப்பட்டது: "தேவன் உங்கள் மீது அன்புகூர்ந்ததால் மற்றும் உங்கள் பிதாக்களுக்கு அவர் வாக்குத்தத்தம் ஏற்படுத்தியிருந்ததால், அவர் உங்களைத் தேர்ந்துகொண்டார்'' (உபாகமம் 7:6-9). தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்டிருத்தல் என்ற கருத்தானது, இஸ்ரவேல் மக்கள் மனதில் பலமாகப் பதிய வைக்கப்பட்டிருந்தது. பழங்காலத்தில் இருந்த மற்ற எல்லா மக்களைக் காட்டிலும் அவர்கள் மாத்திரமே தங்கள் மார்க்கத்தை மற்றும் மக்கள் என்ற வகையில் தங்கள் அடையாளத்தை இன்றைய நாள்வரையிலும் பராமரித்துள்ளனர்.

தேவன் இன்றும் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களைக் கொண்டுள்ளார். அவர்கள் உலகத்தின் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றனர், மாறுபட்ட மொழிகளைப் பேசுகின்றனர் மற்றும் வித்தியாசப்பட்ட பாரம்பரியங்களைக் கைக்கொள்கின்றனர்; ஆனால் அவர்கள், கிறிஸ்து என்ற ஒரே மூலைக்கல்லின்மீது கட்டப்பட்டிருப்பதால், ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். ஞானஸ்நானத்தில் மக்கள், தண்ணீர் மற்றும் ஆவியினால் மறுபடியும் பிறக்கும்போது, அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆகின்றனர். நாம் அவருக்கு என்று தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாகின்றோம்.

நாம், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களாக இருக்கிறோம் என்பதை ஒருக்காலும் மறவாதிருப்போமாக. நாம் ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் பெயரை ஒருக்காலும் கனவீனப்படுத்தாது இருப்போமாக. நாம், ஜீவனுள்ள கற்களாக நம்மை அவர் வைத்திருக்கிற பரிசுத்த ஆலயத்தின்மீது எப்போதும் அன்புகூர்ந்து அதை வளமூட்டுவோமாக.

### ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்

2:9ல் ''ஆசாரியக்கூட்டம்'' என்பதற்கு முன்னால் உள்ள பெயர் உரிச்சொல், 2:5ல் உள்ள பெயர் உரிச்சொல்லில் இருந்து மாறுபட்டிருந்தாலும், சிந்தனை ஒன்றாகவே உள்ளது. முன்னதாகப் பேதுரு, கிறிஸ்தவர்களின் ஆசாரியத்துவத்தை விவரிக்க, "பரிசுத்த'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி யிருந்தார்; 2:9ல் அவர் "இராஜரீக'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், தேவனுடைய உள்வட்டார ஆலோசனைக்கு ஆசாரியர்கள் என்ற வகையில் வழியைப் பெற்றுள்ளனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தின்கீழ், ஆரோனின் சந்ததியார் மாத்திரம் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் பலிசெலுத்துதல் மற்றும் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்குதல் என்ற கனத்தைக் கொண்டிருந்தனர். ஆசாரியராக ஊழியம் செய்தல் என்பது உயர்ந்த சிலாக்கியமாக இருந்தது. கிறிஸ்தவர்களுக்குப் பேதுரு உறுதிப்படுத்திய ஆசீர்வாதம் மதிப்பிட இயலாததாக இருந்தது. கிறிஸ்துவுக்குள், ஒவ்வொரு கிறிஸ்தவரும் ஆசாரியராக இருக்கிறார், ஒவ்வொரு கிறிஸ்தவரும் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கவும் தேவனுக்குப் பிரியமான ஆவிக்குரிய பலிகளைச் செலுத்தவும் உரிமை கொண்டிருக்கிறுர் என்று பேதுரு கூறினார்.

### பரிசுத்த ஜாதி

பழங்கால உலகத்தின் ஆசியா மைனர் பகுதியில், குடிமக்கள் தங்கள்

நகரங்கள் மீது உணர்ந்த வலிவான பெருமைக்குச் சாட்சியளிக்க, பொதுக் கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் மற்றும் கல்வெட்டுகள் தப்பித்திருக் கின்றன. தங்கள் நகரங்கள் மீது வலிவான பற்றுறுதியுடன் இருந்தவர்கள் மேலான எருசலேம் மீது தேர்வுசெய்த அர்ப்பணிப்பை முன்னுரிமை செய்த கிறிஸ்தவர்கள்மீது கசப்புணர்வு கொண்டவர்கள் ஆனதில் வியப்பெதுவும் இல்லை. கிறிஸ்தவர்கள், இந்த உலகத்தில் தாங்கள் அந்நியரும் பரதேசிகளு மாக இருந்ததை ஒப்புக்கொண்டனர்; மனிதர்களின் நகரங்களில் குடி உரிமை என்பது மாறக்கூடியதாக உள்ளது. உலகக் காட்சியில், அரசுகள், நகரங்கள் மற்றும் அவற்றின் குடிமக்கள் வருகின்றனர் மற்றும் செல்கின்றனர். பேதுரு நிருபம் எழுதப்படுவதற்கு ஒருசில ஆண்டுகள் முன்னதாக எழுதப்பட்ட ஒரு புத்தகத்தில், வரலாற்றாளரான லிவி என்பவர், ரோமக்குடியரசைப் பற்றி, “நாம் நமது குற்றங்களையோ அல்லது அவற்றிற்கான சிகிச்சையையோ பொறுத்துக் கொள்ள இயலாத இடத்தை அடைந்திருக்கிறோம்” என்று கூறியிருந்தார். நாடுகள் அந்த இடத்திற்கு வரும் வழியைக் கொண்டுள்ளன.

பேதுருவின் வாசகர்கள் தங்கள் பற்றுறுதியை எந்த நகரத்திற்கு அளித்திருந்தாலும், அவர்களிடம் பேதுரு, “முன்னே நீங்கள் தேவனு டைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்” என்று கூறினார். எபேசியருக்குப் பவுல், “ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளு மாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,” என்று எழுதினார் (எபேசியர் 2:19). கிறிஸ்துவை அறிய வந்துள்ளவருக்கு, தேவனுடைய இராஜ்யத்தில் குடியுரிமை என்பது மற்ற எல்லாப் பற்றுறுதியைக்காட்டிலும் மேலானதாக இருந்தது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருத்தல் மற்றும் அவருடைய, குமாரனின் மரணத்தினால் அவருடைய ஜனங்களுடன் சேர்க்கப்படுதல் என்பதிலிருந்து சார்ந்திருத்தல் மற்றும் அடையாளப்படுத்துதல் ஆகியவை வருகின்றன.

## முடிவுரை

நாம் இந்த உலகத்திற்குள் சென்று, இழந்துபோகப்பட்டுள்ளவர்களுக்குப் போதித்து, உலகத்திற்கு உப்பாகவும் புளித்த மாவாகவும் இருக்க வேண்டும். விரிவாக்கம் மற்றும் வெற்றி ஆகியவற்றிற்கு ஒரு நேரம் உள்ளது, மற்றும் எழுச் சியடைதல், நாம் யாராக இருக்கிறோம் என்று விளக்குதல் மற்றும் மக்களினத் திற்குத் தேவனுடைய மாபெரும் வடிவமைப்பில் ஒரு பாகம் என்ற வகையில் நம்மைக் கண்ணோக்குதல் ஆகியவற்றிற்கு ஒரு நேரம் உள்ளது. 2:1-10ல் பேதுரு, தமது வாசகர்கள் யாராக இருந்தனர் என்று அவர்கள் அறிந்திருப்பதை நிச்சயப்படுத்தினார். மீட்கப்பட்ட சமூகத்திடம் அவர்கள் சார்ந்திருத்தல் என்ற கருத்தை அவர்கள் இருதயங்களில் பதித்தார்.

கிறிஸ்தவர்கள் தங்களைத் தனிமையான தனிநபர்களாக இருப்பதாகப் புரிந்துகொள்வதை குறைத்து, பரிசுத்த ஆலயத்தைத் தாங்குகிற தூண்களாக இருப்பதாகப் புரிந்துகொள்வதை அதிகமாக்காத வரையில், சபையானது சுவிசேஷத்தின் செய்தியுடன் இந்த உலகத் திற்கு அணிவகுத்துச் செல்ல முடியாது. தேவனுடைய மக்கள் மத்தியில் சமுதாயக்

*கருத்துணர்வும் பரஸ்பர பொறுப்பும் நிலவ வேண்டும் என்றால், சுவிசேஷ செய்தியானது, ஆசியா மைனர் பகுதியில் முதல் நூற்றாண்டின் கலாச்சாரத்தில் எதிர்த்து நின்று மாற்றியதைப் போலவே அது நமது கலாச்சாரத்திலும் செயல்பட வேண்டும்.*

*கிறிஸ்டோபர் லாஸ்க் என்பவர், மேற்கத்தியக் கலாச்சாரம் என்பது, "அந்த நேரத்திற்காக வாழுதல் என்பது மேலோங்கியுள்ள பெரும் இச்சையாக உள்ளது - இது உங்கள் முன்னோர்களுக்காக அல்லது பின்னோர்களுக்காக வாழுதல் என்றில்லாது, உங்களுக்காக வாழுதல் என்பதாகவே உள்ளது" என்று கவனித் திருக்கிறார்.[1] நமது காலத்தின் அடையாளக் குறியாக உள்ள, சுயத்தை மைய மாகக் கொண்ட தனிநபர்த்துவம், தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாகவும் பரிசுத்த ஜாதியாகவும் இருப்பதை உறுதிசெய்பவர்களால் வெற்றிகொள்ளப்பட முடியும். பின்வரும் கூற்றானது தேவனுடைய மக்களின் மனங்களிலும் அவர்களிலும் ஆழமாகப் பதியவைக்கப்பட்டிருக்கும்போது அவர்கள் வெற்றி கொள்வார்கள்: "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (2:5).*

---

குறிப்பு

[1]Christopher Lasch, *The Culture of Narcissism* (New York: Warner Books, 1979), 30.